செ.வெ.எண்.319/2009, நாள்:24-09-2009

**காஞ்சிபுரம் நகராட்சியில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட உள்ளது என மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.**

காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி, அவர் பிறந்த காஞ்சிபுரம் நகரியில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் நிறைவேற்றப்படவுள்ளது. பல்வேறு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர், நகராட்சி நிர்வாகம் ஆகியோர் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். நகராட்சி நிர்வாகத்துறை, நெடுஞ்சாலைத்துறை, இந்து சமய அறநிலையத்துறை மூலம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகள் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது. காஞ்சிபுரத்திற்கு பல்வேறு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள், உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, நகராட்சி நிர்வாகத்துறையின் சார்பில் 2 கோடி ரூபாயும், மற்ற துறையின் சார்பில் 3 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ வரதராஜபொருமாள் கோவில் சன்னதி தெருவில் நடைபாதை தளம் அமைக்கப்பட உள்ளது. நடுவில் வண்ண சிமெண்ட் கல் பதிக்கப்படும். சர்வதீர்த்தக்குளம், ரங்கசாமி குளம், ஒக்கபிறந்தான்குளம் ஆகியவை புதுப்பிக்கப்பட்டு அழகுபடுத்தப்படும். எல்லப்பா நகர் பூங்கா மேம்படுத்தப்படும். கே.எம்.வி நகர் பூங்கா பொழுதுபோக்கு அம்சங்கள் ஏற்படுத்தப்படும். அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். காந்தி ரோட்டில் அழகான குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டு சாலைகள் அழகுபடுத்தப்படும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சுந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உடன் இருந்தார்கள்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்